இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முகாமைத்துவ கற்கைநெறி பீடம்

முகாமைத்துவ கற்கைகள் சிறப்புமாணிப்பட்டம்
மட்டம் 4

AFU 4572 -பேரினப் பொருளாதாரம்
இறுதிப் பரீட்சை – 2024 / 2025
காலம்: 03 மணித்தியாலங்கள்

திகதி: 08.06.2025 நேரம்: பி.ப 01.30 - பி.ப 04.30.

அறிவுறுத்தல்கள்:

- இந்த வினாத்தாள் **ஆறு (06) வினாக்களை** கொண்டுள்ளது.
- ஏதேனும் **ஐந்து (05) வினாக்களுக்கு** விடையளிக்கவும். அனைத்து வினாக்களும் சமமான புள்ளிகள் கொண்டுள்ளன.
- உங்கள் **சுட்டெண்ணை** விடைத்தாளின் மேல் கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதவும்.
- இவ் வினாத்தாள் **3 தட்டச்சு** செய்யப்பட்ட பக்கங்களைக் கொண்டுள்ளது.
- விடைத்தாள்களை உங்கள் விடை புத்தகத்துடன் இணைக்கவும்.
- நிழல் படுத்தப்படாத கணிப்பான்களின் பயன்பாடு அனுமதிக்கப்படுகிறது.

**வினா இல. 01**

A) i. "பேரினப் பொருளாதாரம் பல சந்தர்ப்பங்களில் ஒட்டுமொத்த பொருளாதார நடத்தையில் கவனம் செலுத்துகிறது" என்பதை விரிவாக விளக்குக. **(05 புள்ளிகள்)**

ii. வட்டி விகிதம், மாற்று விகிதம் போன்ற முக்கிய பேரினப் பொருளாதார குறிகாட்டிகளின் நடத்தையின் தாக்கத்தை பகுப்பாய்வு செய்வதற்கான அறிவு, ஒரு வணிக முகாமையாளருக்கு வினைத்திறன் மிக்க தீர்மானங்களை மேற்கொள்வதில் எவ்வாறு உதவும்? உதாரணங்களைப் பயன்படுத்தி விளக்குக. **(07 புள்ளிகள்)**

B) i. தேசிய வருமானத்தை (National Income) அளவிடுவது ஏன் முக்கியம்? விளக்குக. **(04 புள்ளிகள்)**

ii. தேசிய வருமானத்தை அளவிடுவதற்கான வரம்புகள் எவை? விளக்குக. **(04 புள்ளிகள்)**

**வினா இல. 02**

A) மூன்று துறைப் பொருளாதாரத்தில் (Three Sector Ecnomey), வீட்டுத் துறை, வணிகத் துறை மற்றும் அரச துறை ஆகியவற்றுக்கு இடையே வருமானம் எவ்வாறு சுழற்சி அடைகிறது என்பதை ஒரு விளக்கப்படத்தைப் பயன்படுத்தி விளக்கவும். **(03 புள்ளிகள்)**

B) மூன்று துறை பொருளாதாரத்தின் விவரங்கள் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளன;
(புள்ளிவிவரங்கள் ரூ. பில்லியன்களில்).

$C = 116 + dY_d$ (நுகர்வு செயற்பாடு) $MPS = 0.2$ (நுகர்வுக்கான விளிம்பு சேமிப்பு)

$I = 108$ *(தன்னாட்சி முதலீடுகள்)* $T = 10$ *(தன்னாட்சி வரிகள்)*
$G = 98$ *(தன்னாட்சி அரச செலவு)*

**i.** நுகர்வு செயற்பாடு (Consumption Function) மற்றும் சேமிப்பு செயற்பாடு (Savings Function) இரண்டையும் தனித்தனியாகப் பயன்படுத்தி தேசிய வருமானத்தின் **(NI)** சமநிலை மட்டத்தைக் கணக்கிடுக. **(04 புள்ளிகள்)**

**ii.** தன்னிச்சையான வரிகளுக்கு மேலதிகமாக, அரசு 20% வருமான வரியையும், ரூ.05 பில்லியன் மாற்றல் கொடுப்பனவுகளையும் (TR = 05) அறிமுகப்படுத்தினால், புதிய தேசிய வருமானத்தின் சமநிலை மட்டம் என்ன? **(03 புள்ளிகள்)**

**iii.** செலவு மற்றும் வரி பெருக்கிகளைக் கணக்கிடுக. **(02 புள்ளிகள்)**

**iv.** பொருளாதாரம் திறந்தவொரு பொருளாதாரமாக மாறி, பின்வரும் மாற்றங்கள் நிகழ்ந்தால்,

$X = 48$ *(தன்னிச்சையான ஏற்றுமதிகள்)* $M = 45 + 0.1Y$ (இறக்குமதி செயற்பாடு)
தேசிய வருமானத்தின் சமநிலை மட்டத்தைக் கண்டறிக. **(04 புள்ளிகள்)**

**v.** உள்நாட்டு ரூபாய் மதிப்பு உயர்ந்து, தன்னிச்சையான ஏற்றுமதிகள் ரூ.**2** பில்லியன்களாலும், தன்னிச்சையான இறக்குமதிகள் ரூ.**1** பில்லியனாலும் மாற்றம் அடைந்தால், புதிய தேசிய வருமானத்தின் சமநிலை மட்டத்தைக் கணக்கிடுக. **(04 புள்ளிகள்)**

<u>**வினா இல. 03**</u>

**A. i.** "IS" வளையி எதைக் குறிக்கிறது? IS வளையி ஏன் எதிர்மறையாக சாய்ந்துள்ளது? விளக்குக. **(03 புள்ளிகள்)**

**ii.** "LM" வளையி எதைக் குறிக்கிறது? LM வளையி ஏன் நேர்மறையாக சாய்ந்துள்ளது? விளக்குக. **(03 புள்ளிகள்)**

**B.** IS/LM கட்டமைப்பைப் பயன்படுத்தி, பின்வரும் மாற்றங்கள் பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தை விளக்குக.

**i.** அரசாங்கம் வரி விகிதத்தை அதிகரித்துள்ளது.
**ii.** பொருளாதாரத்தில் சராசரி விலை மட்டம் அதிகரித்துள்ளது.
**iii.** அரசாங்கம் உட்கட்டமைப்புக்கான செலவினங்களை அதிகரித்துள்ளது.
**iv.** பொருளாதாரத்தைத் தூண்டுவதற்காக கொள்கை வகுப்பாளர்கள் விரிவாக்க பணவியல் கொள்கைகளை அறிமுகப்படுத்தினர்.

**(10 புள்ளிகள்)**

**C.** பணத்திற்கான கேள்வியானது வட்டி விகிதத்தால் எந்த வகையிலும் பாதிக்கப்படாத ஒரு காலகட்டத்தில், வருமான மட்டத்தை மாற்றுவதற்கு மிகவும் பயனுள்ள கொள்கை நிதிக் கொள்கையா (Fiscal Poilcy) அல்லது பணக் கொள்கையா (Monetary Policy)? விளக்கப்படங்களைப் பயன்படுத்தி விளக்குக. **(04 புள்ளிகள்)**

<u>வினா இல. 04</u>

A. i. பண்டமாற்று முறையின் (Barter System) பல உள்ளார்ந்த வரம்புகளை அடையாளம் காணவும். **(04 புள்ளிகள்)**

ii. பணத்தின் தொழிற்பாடுகள் எவை, இத்தொழிற்பாடுகள் பகுதி "i" இல் இனங்காணப்பட்ட பண்டமாற்று முறையின் வரம்புகளை வெற்றிகொள்ள எவ்வாறு உதவும்? விளக்குக. **(06 புள்ளிகள்)**

B. i. "பெயரளவு" மற்றும் "உண்மையான" பண நிரம்பலை வேறுபடுத்துக. **(02 புள்ளிகள்)**

ii. "நிதி இடைத்தரகர்" எதைக் குறிக்கிறது? விளக்குக. **(04 புள்ளிகள்)**

iii. வணிக வங்கிகளில் பண உருவாக்கத்தின் அளவை வைப்பு குணகம் எவ்வாறு தீர்மானிக்கிறது? விளக்குக. **(04 புள்ளிகள்)**

<u>வினா இல. 05</u>

A. i . "தேக்கநிலை பணவீக்கம்" (Stagflation) என்றால் என்ன? விளக்குக. **(03 புள்ளிகள்)**

ii. பணவீக்கத்தின் "கேள்வித் தூண்டல் பணவீக்கம்" (Demand Pull Inflation) மற்றும் "பணவாதக் கருத்து" (Monetarist View) ஆகியவற்றை ஒப்பிட்டு வேறுபடுத்துக. **(06 புள்ளிகள்)**

iii. ஒரு பொருளாதாரத்தில் பணவீக்க அழுத்தத்தைக் கட்டுப்படுத்த காணப்படக்கூடிய பல்வேறு நடவடிக்கைகள் யாவை? **(06 புள்ளிகள்)**

B. குறுங்கால பிலிப்ஸ் வளையி (short run Phillips Curve) என்றால் என்ன? அது எதை விளக்குகிறது? உங்கள் விடையை விளக்க ஒரு விளக்கப்படத்தைப் பயன்படுத்தவும். **(05 புள்ளிகள்)**

<u>வினா இல. 06</u>

A) i. "வேலையின்மை விகிதம்" ஏன் ஒரு முக்கியமான பேரினப்பொருளாதார குறிகாட்டியாகக் கருதப்படுகிறது? விளக்குக. **(04 புள்ளிகள்)**

ii. "இயற்கை வேலையின்மை விகிதம்" (Natural Rate of Unemployment) என்பதை வரையறுக்க. **(02 புள்ளிகள்)**

iii. வேலையின்மையின் செலவுகள் (costs of unemployment) எவை? விளக்குக. **(04 புள்ளிகள்)**

B) i. ஒரு விளக்கப்படத்தைப் பயன்படுத்தி "வியாபாரச் சக்கரத்தின்" (Business Cycle) கட்டங்களை இனங்காண்க. **(05 புள்ளிகள்)**

ii. "கெய்ன்ஸிய வியாபாரச் சக்கரக் கோட்பாடு" (Keynesian Theory of Business Cycle) என்றால் என்ன? விளக்குக. **(05 புள்ளிகள்)**

**- முழு பதிப்புரிமையுடையது -**